# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

முறையீட்டு மனு எண்: **203/2018/**மா
ஆணை நாள்: **18–01–2019**

திரு. V.G. வேல் முருகன்,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 09,
சென்னை மாநகராட்சி,
சென்னை. --- எதிர் மனுதாரர்

திரு. V.G. வேல் முருகன், தலைவர், மக்கள் உரிமைக்கான அமைப்பு, சென்னை என்பவர் 27.9.2018 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ள புகார் மனு 27.9.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.203/2018 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

<u>ஆணை:</u>

திரு. V.G. வேல்முருகன், என்பவர் தனது 27.09.2018 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்ட புகாரில் சென்னை மாநகராட்சி மண்டலம் - 9, வார்டு 111, ராயப்பேட்டை திரு. வி. க. சாலையில் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள கோசுமணி பூங்காவை பொது மக்கள் பயன்படுத்த முடியாத வகையில் ஆக்கிரமிப்பு செய்து, பொது மக்களுக்கு அபாயம் ஏற்படும் அளவில் எரிவாயு சிலிண்டர்களை வைத்துக்கொண்டு சுகாதாரமற்ற உணவுகளை தெருவோர விற்பனையாளர்கள் விற்பனை செய்து வருகிறார்கள் என்றும் மேற்படி ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி பொது மக்களின் பயன்பாட்டிற்கு பூங்காவை கொண்டு வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க 9வது மண்டல அலுவலர், சென்னை மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 28.9.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. அதன்படி, சென்னை மாநகராட்சி 9வது மண்டல அலுவலர், தனது 26.10.2018 நாளிட்ட அறிக்கையில் மேற்படி புகாரில் குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டதாக தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரை தனது முறையீட்டு மனு குறித்து 4.12.2018ல் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்க 7.11.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

முறையீட்டு மனுதாரர் 25.11.2018 நாளிட்ட தனது கடிதத்தில் 27.09.2018 தேதிய புகார் சம்மந்தமாக 15.10.2018 அன்று மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொண்டு அங்கிருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, எரிவாயு சிலிண்டர்களையும், சுகாதாரமற்ற உணவுகளையும் பறிமுதல் செய்து பூங்கா பொது மக்களுக்கு பயன்படும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவினை பராமரிக்க G.C.C. Contractor KCP Engineering Ltd., என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளனர் என்றும், இதனால் அங்குள்ள பொது மக்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தனது கடிதத்தில் பூங்கா குறித்த புகார் மீது நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டு விட்டதால், தங்களது முறையீட்டு மனு மீது மேல் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்திருந்த கோரிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியினால் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் தனது மனு மீது மேல் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ள வேண்டாம் என தெரிவித்துள்ள நிலையில் இம்முறையீட்டு மனு மீதான மேல் நடவடிக்கையினை கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13/2/2019

**பெறுநர்**

1. திரு. V.G. வேல் முருகன்,
   எண். 422, 7வது தெரு, S.A. காலனி, வியாசர்பாடி, சென்னை – 600 039.

2. மண்டல அலுவலர்,
   9வது மண்டலம் ,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   சென்னை.

13/2/19

13/2/19

**நகல்**

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
செயலர் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதிரி